சிறுகமணி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

* 530 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக் கோட்டையிலும், மலையப்ப நகரிலும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக்கோட்டையிலும், மற்றும் மலையப்ப நகரிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு எந்தவித திட்டமும் இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஊர்களிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர வேண்டுமென்று அந்த ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனோ அவை இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தருகிறார். ஒருவேளை, அவற்றைச் செய்துதர பணம் இல்லையா, அல்லது நல்ல மனம்தான் இல்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை என்று திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். தெருக்குழாய்களுக்கு தானியங்கி விசையேற்றம் மூலம் ஆட்டோமேடிக் பிரஷர் பம்ப் மூலம் தண்ணீர் செலுத்த 1962-லே வழிவகைகள் செய்யப்பட்டன. நிதிப் பற்றாக்குறை காரணமாக சிறுகமணி பஞ்சாயத்தினால் அந்தப் பம்ப் செட் வாங்கி வைக்க இயலவில்லையென்று தெரிவித்திருக்கிறார். கையினால் இயக்கப்படும், 'ஹேண்ட் பிரஷர் பம்ப் செட்' மூலம் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

Panchayats without Harijan Members

* 531. THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of village panchayats without elected Harijan members ?